www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

திருவண்ணாமலை மாவட்டம்

HTVM

10 - ஆம் வகுப்பு

காலம் : 3.15 மணி

# அரையாண்டுப் பொதுத் தேர்வு - 2024

## தமிழ்

மதிப்பெண்கள் : 100

பகுதி - I (மதிப்பெண்கள் - 15) 15 X 1 = 15

I 1) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 2) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் சரியான விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினை சேர்த்து எழுதவும்.

1. <u>காய்ந்த இலையும் காய்ந்த தோகையும்</u> நிலத்துக்கு நல்ல உரங்கள் இத்தொடரில் அடிக்கோடிட்ட பகுதி குறிப்பிடுவது
   அ) இலையும் சருகும் ஆ) தோகையும் சண்டும் இ) தாளும் ஓலையும் ஈ) சருகும் சண்டும்
2. "பாடு இமிழ் பனிக்கடல் பருகி" என்னும் முல்லைப்பாட்டு அடி உணர்த்தும் அறிவியல் செய்தி யாது? அ) கடல் நீர் ஆவியாகி மேகமாதல் ஆ) கடல் நீர் குளிர்ச்சி அடைதல்
   இ) கடல் நீர் ஒலித்தல் ஈ) கடல்நீர் கொந்தளித்தல்
3. அறிஞருக்கு நூல், அறிஞரது நூல் ஆகிய சொற்றொடர்களில் பொருளை வேறுபடுத்தக் காரணமாக அமைவது
   அ) வேற்றுமை உருபு ஆ) எழுவாய் இ) உவம உருபு ஈ) உரிச்சொல்
4. பாரத ஸ்டேட் வங்கியின் உரையாடு மென்பொருள்
   அ) துலா ஆ) சீலா இ) குலா ஈ) இலா
5. "மொழி ஞாயிறு" என்று அழைக்கப்படுபவர் யார்?
   அ) தமிழழகனார் ஆ) கம்பர் இ) தேவநேயப்பாவணார் ஈ) வைரமுத்து
6. "அருளைப் பெருக்கி அறிவைத் திருத்தி
   மருளை அகற்றி மதிக்கும் தெருளை"
   அ) தமிழ் ஆ) அறிவியல் இ) கல்வி ஈ) இலக்கியம்
7. மலர்கள் தரையில் நழுவும். எப்போது? அ) அள்ளி முகர்ந்தால்
   ஆ) தளரப் பிணைத்தால் இ) இறுக்கி முடிச்சிட்டால் ஈ) காம்பு முறிந்தால்
8. இரு நாட்டு அரசர்களும் தும்பைப் பூவைச் சூடிப் போரிடுவதன் காரணம் ................ .
   அ) நாட்டைக் கைப்பற்றல் ஆ) ஆநிரை கவர்தல்
   இ) வலிமையை நிலைநாட்டல் ஈ) கோட்டையை முற்றுகையிடல்
9. இலக்கணக் குறிப்பு தருக. - வருபுனல்
   அ) உவமைத்தொகை ஆ) பண்புத்தொகை இ) வினைத்தொகை ஈ) அன்மொழித்தொகை
10. மேன்மை தரும் அறம் என்பது ................ .
    அ) கைமாறு கருதாமல் அறம் செய்வது
    ஆ) மறுபிறப்பில் பயன் பெறலாம் என்ற நோக்கில் - அறம் செய்வது
    இ) புகழ் கருதி அறம் செய்வது ஈ) பதிலுதவி பெறுவதற்காக அறம் செய்வது
11. பூக்கையைக் குவித்துப் பூவே புரிவொடு காக்க என்று .................... வேண்டினார்.
    அ) கருணையன், எலிசபெத்துக்காக ஆ) எலிசபெத், தமக்காக
    இ) கருணையன், பூக்களுக்காக ஈ) எலிசபெத், பூமிக்காக



Scanned with OKEN Scanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

**பாடலைப் படித்து வினாக்களுக்கு (12,13,14,15) விடையளி.**

வண்மையில்லை போர்வலுமை யின்மையால்
திண்மையில்லை நேர்நெலுக ரின்மையால்
உண்மையில்லை பொய்யுரை யிலாமையால்
வெண்மையில்லை பல்கேள்வி மேவலால்

12. இவ்வடிகள் இடம் பெற்றுள்ள எதுகைச் சொற்களை எடுத்தெழுதுக.
அ) வண்மை – வலுமை ஆ) திண்மை – நேர்மை
இ) உண்மை – வெண்மை ஈ) பொய் – பல்கேள்வி

13. பாடலின் மோனைச் சொற்களைக் குறிப்பிடுக.
அ) வண்மை – வெண்மை ஆ) திண்மை – நேர்மை
இ) வண்மை – வெண்மை ஈ) பொய் – திண்மை

14. புகழுரை – பிரித்து எழுதுக.
அ) புகழ் + இரை ஆ) புகழ் + உரை இ) புகழு + உரை ஈ) புகழு + இரை

15. இப்பாடல் இடம் பெற்றுள்ள நூல் எது?
அ) நீதிவெண்பா ஆ) கம்பராமாயணம் இ) சிலப்பதிகாரம் ஈ) தேம்பாவணி

பகுதி – II பிரிவு – 1

**II நான்கு வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க.** 4 X 2 = 8
**(21-வது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்கவும்.)**

16. **விடைக்கேற்ற வினா அமைக்க.**
அ) உலகத்திலேயே ஒரு மொழிக்காக உலக மாநாடு நடத்திய முதல் நாடு மலேசியா.
ஆ) தர்மார்த்தங்களை உபதேசிக்கவே வியாஸர் பாரதத்தை எழுதினார்.

17. "மன்னும் சிலம்பே மணிமே கலைவடிவே
முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே" – இவ்வடிகளில் இடம் பெற்றுள்ள காப்பியங்களைத் தவிர எஞ்சியுள்ள ஐம்பெருங் காப்பியங்களின் பெயர்களை எழுதுக.

18. மெய்க்கீர்த்தி பாடப்படுவதன் நோக்கம் யாது?

19. விருந்தினரை மகிழ்வித்துக் கூறும் முகமன் சொற்களை எழுதுக.

20. காலக் கழுதை கட்டெறும்பானதும் கவிஞர் செய்வது யாது?

21. "பல்லார்" – எனத்தொடங்கும் திருக்குறளை எழுதுக.

**III பிரிவு – 2 ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** 5 X 2 = 10

22. **கீழ்க்காணும் ஊர்ப்பெயர்களின் மரூஉவை எழுதுக.**
அ) உதகமண்டலம் ஆ) மயிலாடுதுறை

23. பாரதியார் கவிஞர், நூலகம் சென்றார், அவர் யார்? ஆகிய தொடர்களில் எழுவாயுடன் தொடரும் பயனிலைகள் யாவை?

24. புறத்திணைகளில் எதிரெதிர்த் திணைகளை அட்டவணைப்படுத்துக.

25. **பழமொழிகளை நிறைவு செய்க.**
அ) விருந்தும் .................... . ஆ) அளவுக்கு ....................

26. **கலைச்சொற்கள் தருக.** அ) Nanotechnology ஆ) Patent

27. **பகுபத உறுப்பிலக்கணம் தருக.** உரைத்த.

28. **பின்வரும் தொடர்களைக் கொண்டு பொருத்தமான தொடர் அமைக்க.**
அ) வரப்போகிறேன் ஆ) மறக்க நினைக்கிறேன்



Scanned with OKEN Scanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

பகுதி - III பிரிவு - 1

IV இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க. 2 X 3 = 6

29. "புளியங்கன்று ஆழமாக நடப்பட்டுள்ளது" - இது போல் இளம் பயிர் வகை ஐந்தின் பெயர்களைத் தொடர்களில் அமைக்க.

30. உரைப் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளி.

அறம் கூறும் மன்றங்கள் அரசனின் அறநெறி ஆட்சிக்குத் துணைபுரிந்தன. அறம் கூறு அவையம் பற்றி அறம் அறக்கண்ட நெறிமான் அவையம் என்கிறது புறநானூறு. உறையூரிலிருந்த அற அவையம் தனிச்சிறப்புப் பெற்றது என்று இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. மதுரையில் இருந்த அவையம் பற்றி மதுரைக்காஞ்சி குறிப்பிடுகிறது. அங்குள்ள அவையம் துலாக்கோல் போல நடுநிலை மிக்கது என்கிறது.

அ) அரசனின் அறநெறி ஆட்சிக்குத் துணை புரிந்தவை எவை?

ஆ) அவையம் பற்றி புறநானூறு கூறுவது யாது?

இ) மதுரையில் இருந்த அவையம் எப்படி இருந்ததாக மதுரைக் காஞ்சி குறிப்பிடுகிறது?

31. தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்' - இடம் சுட்டிப் பொருள் விளக்குக.

V பிரிவு - 2 எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க. 2 X 3 = 6
(வினா எண் 34-க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.)

32. தமிழழகனார் தமிழையும் கடலையும் இரட்டுற மொழியும் பாங்கினை விளக்குக.

33. எவையெல்லாம் அறியேன் என்று கருணையன் - கூறுகிறார்?

34. அடிபிறழாமல் எழுதுக.

அ) " சிறு தாம்பு தொடுத்த " - எனத் தொடங்கும் முல்லை பாட்டினை அடிமாறாமல் எழுதுக.

*(அல்லது)* ஆ) "நவமணி வடக்கயில்போல்" - எனத் தொடங்கும் தேம்பாவணி பாடலை அடிமாறாமல் எழுதுக.

VI பிரிவு - 3 எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க. 2 X 3 = 6

35. வெண்பாவின் பொது இலக்கணத்தை எழுதுக.

36. கவிஞர் தாம் கூற விரும்பும் கருத்திற்கு ஏற்றவாறு தற்குறிப்பேற்ற அணி அமைவதை எடுத்துக்காட்டுடன் தருக.

37. பண்ணென்னாம் பாடற் கியைபின்றேல் கண்ணென்னால்
கண்ணோட்டம் இல்லாத கண் - இக்குறட்பாவினை அலகிட்டு வாய்ப்பாடு தருக.


பகுதி - IV

VII அனைத்து வினாக்களுக்கும் விடையளி. 5 X 5 = 25

38. முல்லைப் பாட்டில் உள்ள கார்காலச் செய்திகளை விவரித்து எழுதுக. *(அல்லது)* சிலப்பதிகார மருவூர்ப் பாக்க வணிக வீதிகளை இக்கால வணிகவளாகங்களோடும் அங்காடிகளோடும் ஒப்பிட்டு எழுதுக.

39. மாநில அளவில் நடைபெற்ற "மரம் இயற்கையின் வரம்" எனும் தலைப்பிலான கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்று முதல் பரிசு பெற்ற தோழனை வாழ்த்தி மடல் எழுதுக. *(அல்லது)* பெருந்தொற்று ஏற்படுவதைத் தடுக்கத் தேவையான முன்னெச்சரிக்கைகளை விவரித்துச் சிற்றூரில் உள்ள உங்களது தாத்தா, பாட்டிக்கு கடிதம் ஒன்றை எழுதுக.

40. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.





Scanned with OKEN Scanner

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

41. வீட்டு எண் : 21, வ.உ. சிதம்பரனார் தெரு, கரூர் மாவட்டத்தில் அரசு மேல்நிலைப் பள்ளியில் பத்தாம் வகுப்பினை நிறைவு செய்த வெற்றி செல்வனின் மகன் குணசேகரன் மேல்நிலை வகுப்பில் சேர விரும்புகிறார். தேர்வர் தன்னை குணசேகரனாகக் கருதி கொடுக்கப்பட்ட மேல்நிலை வகுப்புச் சேர்க்கை விண்ணப்பப் படிவத்தினை நிரப்புக.

42. இன்சொல் பேசுவதால் விளையும் நன்மைகள் ஐந்தினை எழுதுக. *(அல்லது)*

**மொழிபெயர்க்க:**

Among the geographical divisions of the Tamil country in Sangam literature, the Marutam region was the fit for cultivation as it had the most fatile leads. The property of a farmer depended on getting the necessary sunlight, seasonal rains and the fertility of the soil. Among there elements of nature, sunlight was considered indispensible by the ancient Tamils.

**குறிப்பு : செவி மாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினா.**

**உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.**

தமிழர் பண்பாட்டில் வாழை இலைக்குத் தனித்த இடமுண்டு. தலைவாழை இலையில் விருந்தினருக்கு உணவளிப்பது நம் மரபாகக் கருதப்படுகிறது. நம் மக்கள் வாழை இலையின் மருத்துவப் பயன்களை அன்றே அறிந்திருந்தனர். உண்பவரின் மனமறிந்து உணவு வகைகளைப் பரிமாறுபவர்.

1) தமிழர் பண்பாட்டில் எதற்கு தனித்த இடமுண்டு?
2) யாருக்கு உணவளிப்பது நம் மரபாகக் கருதப்படுகிறது?
3) நம் மக்கள் வாழை இலையின் எந்தப் பயன்களை அறிந்திருந்தனர்?
4) உண்பவரின் எந்த நிலையை அறிந்து உணவு பரிமாறுவர்?
5) இப்பத்திக்கு ஏற்ற தலைப்பினைத் தருக.

## பகுதி - V

**VIII அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளிக்க.** 3 X 8 = 24

43. அ) தமிழின் சொல்வளம் பற்றியும் புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும் தமிழ் மன்றத்தில் பேசுவதற்கான உரைக்குறிப்புகளை எழுதுக. *(அல்லது)*

ஆ) போராட்டக் கலைஞர் - பேச்சுக் கலைஞர் - நாடகக் கலைஞர் - திரைக் கலைஞர் ஆகிய தலைப்புகளைக் கொண்டு கட்டுரை ஒன்று எழுதுக.

44. அ) அன்னமய்யா என்னும் பெயருக்கும், அவரின் செயலுக்கும் உள்ள பொருத்தப் பாட்டினைக் 'கோபல்லபுரத்து மக்கள்' கதைப்பகுதி கொண்டு விவரிக்க. *(அல்லது)*

ஆ) அழகர்சாமியின் "ஒருவன் இருக்கிறான்" சிறுகதையில் மனிதத்தை வெளிப்படுத்தும் கதை மாந்தர் குறித்து எழுதுக.

45. அ) குமரிக் கடல்முனையையும் வேங்கட மலைமுகட்டையும் எல்லையாகக் கொண்ட தென்னவர் திருநாட்டிற்குப் புகழ் தேடித் தந்த பெருமை, தகைசால் தமிழன்னையைச் சாரும் எழில் சேர் கன்னியாய் என்றும் திகழும் அவ்வன்னைக்கு, பிள்ளைத் தமிழ் பேசி சதகம் அமைத்து, பரணி பாடி, கலம்பகம் கண்டு, உலா வந்து, அந்தாதி கூறி, கோவையாத்து அணியாகப் பூட்டி, அழகூட்டி அகம் மிக மகிழ்ந்தனர் செந்நாப் புலவர்கள். - இக்கருத்தைக் கருவாகக் கொண்டு - சான்றோர் வளர்த்த தமிழ் - என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக.

*(அல்லது)* ஆ) குறிப்புகளைப் பயன்படுத்தி 'சாலைப் பாதுகாப்பு' என்ற தலைப்பில் கட்டுரை எழுதுக. முன்னுரை - சாலை விதிகளை அறிவோம் - ஊர்தி ஓட்டுநருக்கான நெறிகள் - விபத்துக்களுக்கான காரணங்கள் - தேவையான விழிப்புணர்வு - நம் கடமை - முடிவுரை.



Scanned with OKEN Scanner

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com